அரியலூர் வட்டத்திலுள்ள கண்டராதித்தன் ஏரியை தூர் எடுத்தல்.

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டத்திலுள்ள கண்டராதித்தன் ஏரியை தூர் எடுக்கும்படி அரசுக்கு கோரிக்கை வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு தலப் பொறியாளர் தயாரித்து முடியும் நிலையில் உள்ளது.

Primary Marketing Societies.

*153 Q. THIRU D. SANTOSHAM (on behalf of Thiru D.V. D'Monte) : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) the number of Primary Marketing Societies registered in Tamil Nadu during the calendar years from 1971 ; and

(*b*) the number of societies which are (i) doing business and (ii) defunct now?

தொடக்க விற்பனைச் சங்கங்கள்.

திரு. டி. சந்தோஷம் (திரு. டி. வி. டி. மாண்டி சார்பில்) : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நாட்டில் எத்தனை தொடக்க விற்பனைச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன ?

(இ) அவற்றில் (1) தற்போது செயல்படும் சங்கங்கள் எத்தனை ? (2) செயலற்றுப் போன சங்கங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 9 சங்கங்கள்.

(இ) (1) 4 சங்கங்கள்.

(2) 3 சங்கங்கள்.